கண்டகண்டவிடங்களெல்லாம்விழுந்துமாண்டு
காகம்நரிநாய்கழுகுகாளிகூளி
உண்டுபசியாரிருதைகடைக்கண்ணுலே
ஒகோநான்பார்க்கவருமென்றெண்ணுமல்
சண்டனேநான்செய்ததொருகொடுமைதானே
சதிமோசமிதுதானேயென்னசெய்வேன்.

சகஸ்த்திரமுகன் சொல் தரு.

அய்யோயெனக்கிந்த — விதியாச்சே-போன
அசுரரெல்லாமடிய — கெதியாச்சே
செய்யாதகொடுமைதான் — செய்தேனே-சுத்த
தேவரையடக்கியே — வைதேனே
தீர்க்கமல்லாடக்கண்ணன் — மல்லோதி-யிப்போ
தூரந்தேனேதிடம்சொல்லி — போனசேதி
வீரமுள்ளநிகும்பா — தீர்க்கபாகா-உங்கள்
வீரங்சளெங்கேபோச்சோ — அய்யாவே
யெங்கேபார்த்தாலும் — பிணக்களமா-அய்யோ
யிருக்குதேபிதாலல்ல — ரணக்களமே
தங்கசிம்மாசனம் — பாழாகிக்டவந்து
ஆதரணைசெய்ய — தூணேயெதுவீரர்
அடங்கலுமடிந்தாரே — கெதியேது-யிப்போ
அன்னபிதாமனம் — னெஞ்சேனே
தீராவினைவந்து — தழைத்தாச்சே-யிப்போ
போர்பெத்தகெடிபோக — விதியாச்சே

சகஸ்த்திரன் சொல் கவி.

மாண்டவர்க்சழுதாலென்ன மருபடிவாரதுண்டோ
மீண்டவாருங்கோடின்னம் வேந்தரைகெலிக்கவேண்டி

ஆண்டவனருளேவேண்டி அருந்தவம்யோகம்செய்யும்
தாண்டவர்மகிழும்தம்பி தனையனையழைத்துவாரீர்.

சகத்திரன் சொல் வசனம்.

கேளும் சுகசாரணரே மாண்டவர்க்கழுதால் அகில்பிரயோசன மென்ன ராமர்முதலான குரங்குக்கூட்டகதை இனிவிடப்போகாது அவர்களை யிப்பவே கெலிக்கவேண்டும் யெனது தம்பியான சதமுகன் யோகபலன் ஆருமாகமிருக்குதல்லவா நீங்களிப்பவேயோடி யோகத்தைக் கலைத்துக்கொண்டு அவனை யழைத்துவாருங்கள் சாரணர்களே.

பொது வசனம்.

இப்படியாக சாரணரோடி யிலங்காபுரி கும்பகர்ணனை யெழுப்பிய பிரயாசைக்குமேலாய் தன்பம்செய்து யோகத்தைக்கலைக்க அப்பொது சதமுகன் யெழுந்திருந்து சொல்லுகிற விதங்காண்க.





சதமுகன் சொல் கவி.

அண்டரெண்டபுவனமெல்லாம்திடுக்கிட்டேங்க
அஷ்டமாநாகங்கள்முடிகள்சாய

சண்டவருங்காலருத்திரனேவென்று
கலங்கிமனம்பிரமிக்கதிரொளிக்க
விண்டலத்துதேவரெல்லாம்மெய்மரக்க
மேருகிரிநிலைதலுங்குதித்தெழுந்து
சண்டப்பிரசண்டவுத்தண்டகண்டன்
சதமுகசூரனுமேலருகின்றனே.

சதமுகன் வருகிற தரு

சத்தலோகாதிலோகம் மெத்தகெடிகொண்டாடும்
சதமுகாசூரனானே
யேகுவீர்கோரபதி யெதிரில்லாதீரனை
கற்றவித்தையினாலே கடலேதாண்டிகுதிப்பேன்
கவிழ்த்துவிழுக்கிரியை காலிலாலேயுதைப்பேன்
காலனைகிழிப்பேன் செந்திருமார்பனையொழிப்பேன்
மேலும்சிவயோகத்தை முடிப்பேன்
கோலாகாலனை யெதிரியைமடிட்பேன்-சத்த

அண்டத்துதேவரை அதட்டியேஓட்டுவேன்
அஷ்டகிரியைவாரிம் அம்மானீராடுவேன்
சண்டன்தொழிலடத்தி சகலரையுமடிப்பேன்
சத்தசாகரரீரை தாகசீராக்குடிப்பேன்
தத்தியேமீரிமிக்க வித்தைகள்கூரி
பித்தலமெங்குமே சுத்தியவருவேன்
சத்துருக்களைக்கொன்று வெற்றிகள்பெருவேன்-சத்த

திக்குதேசங்கள்தன்னை நீண்டிமண்ணைடெடுப்பேன்
தேசமெங்கும்விஜயம் செய்துபல்மரிவேன்
பக்குவமாகயீசன் பாதமடிபுரிவேன்
பாதாளசேஷனை பிடித்துஅரிக்கெரிவேன்
பண்டுபலாசன் சூரதண்டகுலேசன்
தண்டமும்கொண்டுமே சண்டனைமடிப்பேன்
துண்டரைகண்டுமே மண்டையையுடைப்பேன்-சத்த

யெவருமதிகலங்க யெந்தன்வீரம்காட்டுவேன்
யிகூணம்தணையன்தயர் அணுகாமல்வோட்டுவேன்
குவலயமரியவே யென்கெடிகாட்டுவேன்

கொஞ்சமாகிளப்போரை பம்பரம்போலாடுலேன்
குந்தகமில்லாதமையன் யெந்தனைத்தேட
சிங்கதும்வாடவே வந்துமேகணமீடன
அந்தமச்திலை தந்திரமேயென-சத்த

சதமுகன் சொல் ஜம்பை.

உன்னிதனேயென்கலமாரா யோகநிக்ரைதனைக்கலேத்த
யென்னையிங்குஅழைத்தகென்ன யிணையடிக்கேசருணம்

சகஸ்த்திரன் சொல் ஜம்பை.

மன்னவனேயத்திராமன் வந்துகுரங்கதைவிடுத்த
அன்னிதமாய்படைகளெல்லாம் அதமாகசெய்தான்

சதமுகன் சொல்-ஜம்பை.

மானிடவன்குரங்குடனே வந்துயிங்கேஅதம்செய்ய
யேனையிங்குவரும்விதியோ யென்மனம்துடிக்குதையோ

சகஸ்த்திரன் சொல் ஜம்பை.

இலங்கையாண்டராவணனே யின்பமுடன்கருவருத்த
குலங்கெடுக்கயிங்கேவந்தான் குரங்குடனேராமன்

சதமுகன் சொல்-கவி.

இலங்கையையழித்தானென்றும் யில்விடம்வந்தானென்றும்
புலங்களையுரைக்கும்போது பொங்குதேகோபமென்ன
கலங்கிவாகரழித்தகனமானராமன்சேனி
பலங்களையழித்துகானும்பஞ்சுபஞ்சாக்குவேனே.

சதமுகன் சொல் வசனம்.

இலங்காபுரி சம்மந்தியாகிய ராவணதிகளை மடித்தானென்றும் சொன்னளவிலே யெனது யிரதுயங்களும் துடித்துப் பதைக்கின்றது ஸ்ரீராமமூர்த்தியானவர் வானரக்கூட்டங்களை சேர்த்துக்கொண்டுவந்து யிருப்பதால் நானவர்களை யெமபுரிக்கு அனுப்பிவைத்து வருகிரேன் விடைதாரும் யெனது அண்ணாவே.

சகஸ்த்திரன் சொல் வசனம்.

அப்படியே போய் ஒருஷணத்தில் வாரும்தம்பி சதமுகனே.

சதமுகன் யுத்தம் தரு.

சதகண்டசூரனும் நவகண்டமதிரவே
சண்டைக்குவந்தானே ராமனைநாடி-சண்டை
மம்மெகண்டயானைகள் துதிக்கள்பரிகள்கோடி-சுரு
வாரவீரியம் பாரும்நடுங்கிட
சூருமாலியன் தேவரெடுங்கிட-சதகண்

அணிமுத்துமயமான மணிசித்ரதமேரி
அம்புதனுவாள்தண்டம் தாங்கினன்
கணிதத்திலடங்காத அசுரர்சேனைகள்சூழ
கடிகிபட்டணம்விட்டு ஏகினான்-சுரு

காலருத்திரன் போலவருகிரான்
மாலுமற்றவர் மனதுநோகவே-சதகண்

யிடியைப்போலவேபேரி டமாமுரசுபாட
யிரையும்கடலும் கோஷ்டம்பாடவே
கொடியகாலனுமஞ்ச படியும்கிடுகிடென்ன
குலிங்கிரதமும் மிஞ்சியோடவே-சுரு

கொண்டல்வண்ணனும் கண்டுபிதிர்பட
அண்டகிரணமும் பிண்டுவுதிர்பட-சதகண்
அடிக்குரேன்நவமரை கொடிக்குள்ளேபாரென்று
ஆக்ரமித்துவீரம் காட்டினன்
மடிக்குரேன்படையெல்லாம் மண்ணிலரைந்துமோதி
வருவேனெனவில்லெப் பூட்டினான்- சுரு

வந்தனேயிதோ னந்தநாபத்தை
தந்தனேயெதிர் மூந்திகோபத்தை-சதகண்

பொது வசனம்.

இப்படி சதமுகராவணன் யுத்தத்திர்க்கு வரும்போது ராமராவனவர் விபூஷணனிலே புலம்தெரிந்திருந்க அப்போது சீதையம்மன் சொல்லுகிர விதங்காண்க

சீதையம்மன் சொல் கவி.

ம்ராமமுருகச்செய்து வாலியைவதைத்தகோவே
பாபரபொருளாய்வந்த பரந்தாமாஅடியாள்போற்றி

சராசரம்நடுங்கவந்த சதமுகவனுமிகே
யிராமலேகொன்றுகாணே யெமகிரியனுப்புவேனே.

சிதையம்மன் சொல் வசனம்.

மராமரமேழையும் ஓர் பாணத்திகாலே உரிகி ஓடச்செய்து வா வியைவதைத்த ஆதிபரந்தாமா மேருவைநிகரொத்த காதகனைச தமுகன்பேரில் அடியாளை அனுப்பினவத்தால் நிமைப்பொழுதில் அவனேசம்மாரம்செய்து வருகிறேன் விடைதாரும் பிராணநாயகா.

ராமர்க்கும் சிதைக்கும் தர்க்கம் தரு.

ஞாயமா அடிகோமளமயிலே ஓகோஉமக்கிது- ஞாயமா
அடிஜனகன்பெண்ணே ஞாயமா
ஞாயமாயிது அசுரர் மாயமந்திரமரியாமல்
சேயிழையெதுப்பேனென்று வாயுரையாய்நாவெடுக்க- ஞா

சிதை சொல் தரு.

தீரமேசுவாமிமஞ்சுடர்வதனு ஓகோயெனக்கவன்- தீரமே
சுவாமினந்தனு ஓகோயெனக்கவன்தீரமே
தீரமாஉம்மைநாடி வாரூரன்தன்னைவெல்ல
நேரமோயெனக்குமெத்த பாரமோபாருந்திராணி-தீர

ராமர் சொல் தரு.

ஆசையாயடிகோவையதரா ஓகோவுனக்கிது- ஆசையாயடி
ஆசையாகவீரவார்த்தை பேசலாமோயென்னைதீர
பாசமாயுனையனுப்ப மோசம்மோசமம்பாகொணது- ஆசை

சிதை சொல் தரு.

மாதவாநல்லஉலகமளித்தசங்கரா ஓகோ அரிகரிமாதவா
மாதவாயிப்படிகொதித்த வாதனைப்படுவதென்று
நாதனேயென்னையனுப்பி சோதனைப்பாருங்கண்ணுல்-மா

ராமர் சொல் தரு.

தாடகிஅடிஜனகன்பெண்ணே ஓகோபலமுள்ள-தாடகி
காடகியவறுமல்லோ யிடழிந்தாரெந்தநாளே
வாடநேரும்நீயெதிர்க்க கூடுமோஅதிப்பிரசண்ட-தாட

சீதை சொல் தரு.

ஆலலாகந்தனை ஓகோ அதிவித-ஆலலாகந்த
ஆலலாய்சூரன்மீதில் தேவனேயெனையனுப்பி
தேவியேசண்டப்பிரசண்ட பாவனைக்கொண்டருள்செய்யும்-ஆ

ராமர் சொல் தரு.

நீதியாய்சக்திரவதனி ஓகோஉனக்கிது-நீதியாசந்
நீதியாய்அசுராதிகள் சேதியரியாமல்
ஆதிசிவன்கண்டரியா வாதிஜையும்மேயிதிர்க்க-நீதி

சீதை சொல் தரு.

பஞ்சகோகண்டகர்ண்ணை ஓகோ அடியாள்-பஞ்சகோ
பஞ்சமுகன்யீசன்தேவி செஞ்சடாதரியென்றெண்ணி
சஞ்சலம்கணையகற்றி அஞ்சாமலருள்செய்காதா-பஞ்ச

ராமர் சொல் கவி.

பைங்கிளியாளேபரமனைப்பணிந்து
பலமுடன் அஸ்த்திரம்படைத்து
சங்கையில்லாமல்தளமதுபேரிகை
சதாசிவன்தேவரும்கடுங்க
பொங்கியேவார சதமுகனுடனே
போர்செய்யத்தணிந்திடுமுனக்கு
தங்கமேபங்கம்வந்திடுமென்று
தயங்கியேமயங்கிவாடினனே.

ராமர் சொல் வசனம்.

கேளும் ஜனகரன்மகளே அந்த அசுரனே பரமபதம் வணங்கி அனேக அஸ்த்திரபலமும் யின்னம்வேண்டுமான வரங்களும் பெற்ற வன் பிரளயசேனசயனியத்துடன் சிவமெருமான் முதலானதேவர் கள் கடுங்கத்தக்கதாகவும் சண்டமாருதவாய்வைப்போல வருகிர சதமுகனுடைய பலபராக்கிரமும் மாய்கையும் யோசித்தரியாமல் அவனுடனேயெதிர்க்க துணிவது உனக்குபங்கம் வருமென்று மனம்தயங்கலானேன் நீசமருக்குப்போகலாகாது பெண்ணே சீதா.

சீதை சொல்கவி.

வல்லமையரியமாட்டீர் வந்தெனக்காய்வளைத்த
வில்லின்கீழிருந்தபந்தை வீசியேயெடுத்தகாலம்
சொல்லியேழுநாலத்தில் தூக்கிவந்தெடுக்கதந்தை
நல்லவீரசுலக்கையென்று நாமமுந்தந்திட்டாரே.

சீதைசொல்-வசனம்.

கோதுமையா சுவாமி பகவானேயெனது வல்லமையையரியமாட்டீர் நான்யிளமைப்பருவத்தில் பந்துவீசினேன் அந்தபந்தானது தேவரீர் யெனக்காகவளைத்த வில்லின்கீழ்கிடப்பதைக்கண்டு யெனதுயிடது கரத்தால்தூக்கி வலதுகரத்தால்பந்தை யெடுத்துக்கொண்டேன் அதை யெனதுதந்தையானவர் கண்டு வீரசூலக்கையென்றுநாமதேயம்கொடுத்தார் நீர்சந்தேகப்படாமல் அடியாளுசமருக்கு அனுப்பிவையும் யெனதுபிராணநாதரே.

ராமர்சொல்-தரு.

எண்ணங்களரியமல் வண்ணங்கள்பேசாதே
இதுவுனக்கேர்க்காது சூரமேசனேகள்
அதுவந்துதோர்க்காது சுரு
யிடியைப்போலவே முடிகிவந்திடும்
கொடியிலானவனே முடியுமோவெல்ல-எண்

சீதைசொல்-தரு.

விண்ணவரரியவே கொண்டுஜெயம்பெருவேன்
வீரசதகண்டனே அவனுமென்று
பேர்பெற்றயிசனே சுரு
வீரமிஞ்சிய சூரன்படைகளை
கோரமடங்கவே தீரமுடன்சொலும்-விண்ண

ராமர்சொல்-தரு.

பெரிதாய்வெல்லுவேனென றுவிருதாவாய்பேசும்வார்த்தை
வெற்றிக்கொண்டவனனே தேவரையெல்லாம்
மெத்தக்கண்டவனிவனோ சுரு
வண்டலத்தவர் தொண்டுசெய்வது
கண்டதில்லையோ சண்டைசெய்ய-பெரி

85838

சீதைசொல்-தரு.

தொடுத்தவிறுதையெல்லாம் அருத்துஅதம்படித்தி
தண்டிப்பேனீபாரும் படையோடிப்போ
கண்டிப்பேனீபாரும் சுரு

சுத்தவீரியர் பத்துபத்துசிரம்
கொத்துகொத்தாக அத்திடசெய்வேன்-தொடுத்

பொது-வசனம்.

இப்படியாகயிருவரும் வாதாடுகிறபோது ஆகாயவாணி சொல் லுகிறவிதங்காண்க.

ஆகாயவாணிசொல்-வசனம்.

கேளும் ராமச்சந்திரமூர்த்தியே அந்த சதமுகராவணன்சீதாபி ராட்டியால்பதவிபெற பிர்ம்மாவிதித்தபடியிருக்குறார் சந்தேகமில்லா மல்சீதாபிராட்டியை அனுப்பிவையும் ரகுனந்தனே.

ராமர்சொல்-கவி.

குண்டலம்வாணிசொல்லகுளிர்ந்தமனதுபெண்ணே
வென்றிடசமருக்கேற்றவிருதெல்லாமுனக்களித்தேன்
கண்டுநான்மனக்களிக்கடுகியேரதத்திலேறி
சண்டைசெய்திடவேவாசதமுகன்தனைவெல்வாயே.

ராமர்சொல்-வசனம்.

கேளும் பெண்ணேசீதா உனதுவல்லமையைஆகாயவாணிஉண் மையாகச்சொல்லயெனக்கு ரொம்பவும் சந்தோஷமாச்சுதுஆகையா ல்யுத்தப்பிரசங்கமாய்விருதணிந்துவரத்தினமயமானரதத்தின்பே ரிலேறிசண்டைசெய்திட சதமுகன்வருகிறபடியால்அவனைஜயம்பெ ற்றுவருவாய் பெண்ணேசீதா.

சீதைசொல்-கவி.

மணிமுடியலங்கரித்தவானவர்முனிவர்வாழ்த்த
அணிவிருதுடனேராமர் அளித்தகோதண்டமேந்தி
தணிவுடன்சேனைசூழ துலங்கியரதத்திலேறி
பணியொளிவதனசீதாபைங்கிளிவருகின்றாளே.

சிதையுத்த-சுரு

சண்டைசெய்யவேசத — கண்டராவணன்மீது
ஜானகியம்மன்நடந்தாள் — நல்ல-சுரு

கெடியதுபெருகிட — மணிமுடி தலங்கிட-சண்டை
யெண்டிசையும்நவ — கண்டம்கிடுகிடென்ன
மண்டலதேவர்வதிக்க — தண்டைகலகலென்ன-சுரு

மதிமுகமிலங்கிட — ரதமதிலேரி
யெதிரிவீரரும் — பதரிடவாட-சண்டை

சத்தபேரிகைடங்கா — வெற்றிசின்னம்பூரி
யெத்திசையுமுலகம் — தத்தளித்தேனடுங்க-சுரு

யிடியமுரசுகள் — வெடிபடஅண்டம்
வடிவுள்ளவானவர் — படையுடன்நடுங்க-சண்டை

சடித்தம்பேசியேயெதிர் — அடித்தபடையுடனே
யெடுத்தபாணத்திராலே தொடுத்துகெலிப்பேனென்று-சுரு

யிரையவனருளிய — மரையவர்தேவர்
நிரையவேஅண்டம் — திரமையைக்காண-சண்டை

கனத்தபடையுடனே — மன்த்திலச்சமில்லாமல்
ஷ்ணத்திலுத்தம்செய்ய — நினித்துவந்தவன்தன்னை-சுரு

அதலகுதலப்பட — திதாவொட்டாமல்
மூதல்வனேபெலி — வதையிடயெண்ணி-சண்டை

சதமுகன் சொல் கந்தார்த்தம்.

படைமுகமகிமாரே பாருங்கள்பெண்ணெருத்தி
தடைபடாவீரங்கொண்டு சமர்செய்யதுணிந்துமிக்க
யிடைவிடாபேரிமீட்டி யெதிர்த்திடும் சமர்த்தைப்பார்க்க
கடைவிழிபொரிபரக்க.

சதமுகன் சொல் தரு.

காலகாலனுமேவினார் — தனுவெடுத்து
ஆலகாலம்போலவே — தாவினார
சாலவேராஜபாணம் — மூலமந்ரங்களோதி
மேலுமேலுமாகவீசினன் — விருதுபாலஷ
கோலாகாலனுகப் — பேசினான்

மிஞ்சியெனதுபடை அஞ்சுந்தேவர்களெல்லாம்
கொஞ்சமாய்நினைத்துவந்த வஞ்சியைகெலிப்பேனென்று-கர

சீதை சொல் கருத்தார்த்தம்.

சதமுகன்விட்டபாணம் சராசரம்நடுங்கவந்த
விதமதைகண்டுசீதை வெகுண்டுமேவில்வளைத்து
பதமரியாமல்விட்ட பாணமும்படைகளெல்லாம
அதமதுசெய்வேனென்று.

சீதை சொல்-தரு

ஆவலாய்சரமெடுத்தேன் மூவருமங்கே
தேவருமொடுங்கவிடுத்தேன்
மேவியயெனதுவீரம் பாவனையரிந்திடாமல்
மீண்டேன்மனம்பதைக்க யெந்தனைக்கண்டு
ஒண்டிசிங்கம்போலெதிர்த்தேன்
மீரியபடைகளெல்லாம் கூரியபாணத்தினாலே
சேரும்யெமகிரிக்கு நேருமோயெந்தனைக்கொல்ல-ஆவலா

சதமுகன் சொல்-தரு.

சகலத்திரமுகன்தம்பி சதமுகராவணன்
சங்கரிக்கவில்லை யெடுத்தேன்
சற்றும்பயமில்லாமல் பெண்ணெனுருத்தியிங்கே
சமர்த்துப்பேசாதேசொன்னேன் வந்துபயமுருத்தி
மிக்கதளத்துடனே வெட்டிகெலித்திடுவேன்
மீரிவந்துனைக்கொல்ல நேரமுண்டோகண்டரியும்-சகலத்

சீதைசொல்-தரு.

பத்துசிரசைவாட்டினேன் நான்
வீரசரம்பூட்டினேன் பாரும்
காடிவந்தசூரரையெல்லாம் பஞ்சாய்
பரக்கடித்தேன் வீரர்களே
அற்றசிரசுமுன்போலே பற்றிக்கொண்டதுதன்னுடே
ரத்தம்வெளிதுளிகாணும் பெற்றவரம்கண்டுநிதா-பத்து

சதமுகன்சொல்-தரு.

துண்டித்தசிரசெல்லாம் தருத்திடவே
சூரரெல்லாரும் முளைத்திடவே

சொல்லும்யெந்தனைவெல்ல முடிந்திடுமா
சூரத்தீரனுமிக்க மடிந்திடுமா
கண்டித்திடவேபாணம் கொண்டேன்கோடானகோடி
கார்த்திடுமுத்தனுயிரைபார்த்திடும்யெந்தன்சமர்க்கை- தண்டி

சீதைசொல்-தரு.

தரிக்கியெரியவுயிர் கூடிடவே
ரத்தசதமுகன்றண்டாக்கிடவே நாடி
ஓயாமல்வெட்டிதைசலிக்க அவன்
நாசனைடந்திடாமல் நலம்சலிக்க
சூருக்கிலவனைக்கொல்ல சூழ்ந்தசதமுகனை
தூலிக்கவெகுநாள்செல்லும் மலிக்கமனம்பிர்மிக்க- நரிக்கி

சீதை சொல் வசனம்.

ஆப்பா ஆஞ்சனேயா சதமுகன் ராவாணதிகளை வெட்டவெட்ட தளுக்கவும் உதிரம்சிதரினவுடனே தூளிக்கொரு சதமுகராகிகணக்கில்லாதசதமுகன்உண்டாகிசண்டைக்குவருகிரபடியால்யிவாளைக்கொல்ல கோடிகாலம் செல்லும் யிதர்க்கொருஉபாயம் சொல்லுகிரேன்உனக்கு ஐந்துமுகமும் பதினெட்டு அஸ்தமுந்தான்யிதோ மூன்றுகண்ணும் கோரதந்தமும்பதினெட்டு அஸ்தமானஉகாந்தகிரி வேடம் கொண்டேன்யிப்போயிவன்கெட்டான்யிவன்மாய்கையையும் கெடுத்துவிடயிதோ கோதண்டமெடுத்து பஞ்சாஸ்திரம் விட்டேன்யிதிலுண்டாகிய பாவனையைப்பாரும் அனுமந்தா.





கணங்கள்வருகிர-தரு.

வருகுதபார்பிசாசுகணங்கள் மண்ணுமதிரவே
குநகுதபார்குண்டோதரனும் குதித்துகுதித்துமே
பிரம்மாகூடினீஜாகினி பிரண்டுவருகுதே
வரமிகுத்தமகோதரனும வந்துகவியுதே
காளிமாகாளிசூலப்பிடாரி கடிந்துவருகுதே
கூளிகாட்டேரிஉதிரகாட்டேரி குதித்துவருகுதே
காவிதாவியொன்றுய்கூடி தாளம்போடுதே
கூவிகூவிபசிக்குதென்று கூத்துகளாடுதே

கணங்கள்சொல்-வசனம்.

அம்மா யெங்களேஅழைத்தசேதிசொல்லுமம்மா அவர்களேக்காட்டும் சும்மாயிருந்தால் நல்லதல்ல சிகிரம்சொல்லுமம்மாதாயேசிதாங்கனி.

சீதைசொல்-கவி.

மட்டில்லாபூசப்பிரேதம் வரும்சிரசிரமேற்கண்ணும்
கெட்டியதூடிரம்வாரகேவலசதுர்முகனேவெட்ட
பொட்டெனயெரியும்போது பின்முன்னுமருகிருந்து
நிட்டெனஉதிரம்வாரிசிந்தாமல்பகழிப்பீரே

சீதைசொல்-வசனம்.

கேளும் பிசாசுகணங்களே கண்ணுக்கெட்டியதூரம் பரவிய சதுர்முகனே நான்வெட்டியெரியும்போது நீங்களவனருகிருந்து ஒருதுளி உதிரம் பூமியில்சிதர ஒட்டாமல் உதிரபானம் செய்திடுங்கள் அவர்கண்டு வாட்டிஞல் உயிர்போகாமல் முன்னிலும் பின்னதிகமாய்வாழ்வளித்தோம் போய்வாரும் கணங்களே.

சதுர்முகனுக்கும் கணங்களுக்கும் தர்க்கம் தரு.

ஓடாதேநில்லுங்கள் வீரர்களே-உங்கள்
உதிரம்குடிக்கவந்தோம் சூரர்களே

சதுர்முகன் சொல் தரு.

ஆங்காரங்கொண்டிங்குவந்த பேயினமே-உங்களே
வெட்டியெரியவந்தேன் நாயினமே

கணங்கள்சொல்-தரு

நமனுக்கிரையாவீர்கள் வீரர்களே-உங்கள்
ரத்தமையங்களுக்கிரை சூரர்களே

சதமுகன்சொல்-தரு.

தும்சம்நான்செய்யவந்தேன் பேயினமே-நீங்கள்
துள்ளாதேயிங்குலவந்து காயினமே

கணங்கள்சொல்-தரு

ஆச்சுதயங்கள்வீதி சூரர்களே-நீங்கள்
அடியோடுமடியப்போரீர் வீரர்களே

சதமுகன்சொல்-தரு.

யெத்தாகாலும்விட்ட பேயினமே-யிது
யெங்கும்பெருகுதடா காயினமே

பொது வசனம்.

இப்படி தர்க்கம்செய்துக்கொண்டிருக்கும்போது சிதையம்ம நானவள் பிணப்பிரவேகம் செய்கிறவிதங்காண்க

சிதைசொல்-தரு

கோதண்டத்தில்பாணமீட்டினேன் அனேகசூரர்கள்
கும்புகும்பலாய் சாயவாட்டினேன்
கோதண்டத்தில் பாணமீட்டி
கொடியசதமுகன் படையைவாட்டி
சிதைதண்டத்தால்முடிகியோடவே சேனைகளெல்லாம்
கடிகிவந்தசோர் சூரர்வாடவே (கோ)

சதமுகன்சொல்-தரு

ரத்தமகிமையாலுதித்த சதமுகனேகும்படி
நாடிவந்தோமேகோபமிருத்து

ரத்தசதமுகன் உதிரம்பெருகிட
பேய்களும்கண்டு வந்துயெதிர்பட
கத்தியேயவர் பாணமுருகிட
கங்குகங்காகவே சாய்ந்துமடிந்திட (ரத்)

சீதைசொல்-தரு

விட்டபேய்கணம் மிருத்துவருகுதுபார்சாகாமல்
உதிரத்தைமேவிடாமலே கரவியுரியுதுபார்

வெட்டிமடிக்குவே — தெம்புகொண்டேனே
மேருகிரிசூரும் — மருவியேகண்டேனே
அட்டகாசமும் — செய்துநான்றேனே
அசுரர்மாயத்தை — அரிந்துகொண்டேனே(விட்)

சதமுகன்சொல்-தரு.

பேரிடிபோல்அதட்டிமீரினேன்பிர்தஅண்டமதிர்ந்திட
பிர்ம்மாஅஸ்த்திரந்தன்னைமேவினேன்

பேரியுடனே — பொங்குமதிர்ந்திட
பிரளயத்துடன் — கிரணமுதிர்ந்திட
வீரிடபவ — தேவர்நடுங்கிட
மெல்லியபிரை — கண்டுஒடுங்கிட-பேரிடி

சீதை சொல் தரு.

பிர்மாஅஸ்த்திரம்வில்லில்பூட்டினேன் யெதிர்வரும்
சதந்தன்னைபின்னிடும்படி ஒடுங்கவாட்டினேன்

பிர்ம்மாஅஸ்த்திரம்தன்னை — மாத்தினேன்
பெரும்படைகளையெல்லாம் — காக்கினேன்
வரிகுத்துமேசரங்கள் — காட்டினேன்
வானவர்படுந்துயர் — மாத்தினேன்-பிர்மா

சதமுகன் சொல் தரு.

அரிகாராயண அஸ்த்திரமெடுத்தேன் மனம்நடுங்கிஒடுங்கிட
அகிலமெங்குநிரையவிடுத்தேன்

அரியஉலகமும் — அச்சம்கொள்ளவே
அமார்முனிவரும் — மனதுதுள்ளவே
கெரியயென்னிட — ஜெயமுமெச்சவே
சீதாவுன்னையும் — வெட்டிதள்ளவே-அரிகார

சீதை சொல் தரு.

வெத்திமிருத்திடவிட்ட சதமுகனேயென்னிட
வீரவல்லமகெரியுமோமுகனே

பெற்றிடப்பாணம் மேவிட
மேலுமேலாய் தாவிட
சுற்றிவந்தவென் பதம்பணிந்திட
சுருதிநாயகி நாலுமளிந்திட- வெத்தி

பொது வசனம்.

இப்படியாக சதமுகன்விட்டநாராயண அஸ்த்திரமானது லோகமாதாவாகிய சீதாபிராட்டிபாதம்பணிந்து அடங்க அதுகண்டசதமுகராவணன் சொல்லுகிர விதங்காண்க.

சதமுகன் சொல் கவி

அண்ணலேவிஸ்வநாதா அதிகேவலமாய்வந்த
பெண்ணவள்மாயத்தாலே பெருந்த அஸ்த்ரமெல்லாம்
யெண்ணவேபாழாய்போச்சு யிளைத்துவோரிடத்திலோடி
குண்ணியேசதமுகன்தான் கோவென்றுபுலம்புவானே.

சதமுகன் சொல் வசனம்.

அய்யய்யோ தெய்வமே கேவலமாய் வந்தபெண்பாலிநாலே நான் அனேககாலம் தபசுசெய்துபெற்ற நாராயண அஸ்த்திரங்களெல்லாம் விருதாவாய் போனதுமன்றி மகாபெருமை பெற்ற நாராயண அஸ்த்திரம் அவள் பாதம்பணிந்து யிளைத்துக் களைத்துவர தவிக்கலானேன் தெய்வமே.

சதமுகன் சொல் தரு.

அய்யய்யோயிந்த விதிவந்துவாச்சுதே
அளவிலாயெந்தன் படையும்பாழாச்சுதே- சுரு

அஞ்சுதேமனம் வஞ்சம்தீரவே
சஞ்சலங்களும் மிஞ்சுதேயென்செய்வேன- அய்யய

திக்குபாலருடன் தேவரைவென்றேனே
திருலோகமெல்லாம் தபசில்பேரெடுத்தேனே- சுரு

செங்கைவீரியம் யெங்கும்நடுங்குதே
மங்கைக்கஞ்சியே பங்கமடைந்தேனே- அய்யய

சங்காரியெந்தன் தபமெல்லாம்போச்சுதே
தரணிசெங்கோலுமே அழிந்திடலாச்சுதே- சுரு

கத்திதனும்புதே சித்தம்சலங்குதே
மெத்தவேவயர் பற்றியெரியுதே-அய்யய

கோதைசீதையைகானும் கொஞ்சமாய்நினைத்தேனே
கோட்டைக்கொத்தனமெல்லாம் கொரங்காலழித்தேனே-சுரு

குவலயத்திலே யெவர்மதிப்பவர்
பவறும்வந்திட தவருகேற்கதே-அய்யய

சகஸ்தரன் சொல் கவி.

பயமேதுயெந்தனுக்கு பண்புடன்யாகம்செய்ய
ஜெயமேதுவந்தஅப்ப சீதையுமொருபொருட்டோ
தயவதுபார்க்கமாட்டேன் சதிமோசத்துக்குவந்த
நயமதாய்பாதாளத்தில் நான்யாகம்கடத்துவேனே.

சகஸ்தரன் சொல் வசனம்.

ஆ! ஆ!! பளபளா நல்லதாகட்டும் யெனக்கென்ன முன்னாலே மகாதேவன்தெரிவித்த வீரமாகாளியாகபலநிருச்சும்போதுநான் ஒருவருக்கு அஞ்சுவேனோ அவர்களைக்கொல்லாமல்விடுவேனோ அவரையெனை வணங்கிகாலும் தயவுதாக்ஷண்ய மில்லாமல் கடத்தப் போகிறேன்பாரும் சூரரே.

சதமுகன்யாகத்தக்குப்போகிற-தரு

கிடுகிடெனவே அதிர்ந்துபுழும்பி காலால்தேய்க்கவே
காவிகூளியையெழுப்பியாகத்தில் காத்தில்தூத்துவனே
வந்தவழியேயோடிப்போகாமல் நீக்களோடியே
வளைத்துமுத்திகைபோட்டிடுக்கள் வல்லதூதரே
யெந்தவிதத்தில்பிழைக்கப்போரள் அந்தசீதையும்
யெனக்குயெதிரியுலகுண்டோ யிவளோஜெயிப்பது
கொஞ்சமென்றுநினைதுகொண்டான் கோதைசீதையும்
கொஞ்சத்தம்குரங்கைசாம்பலாக யெரித்துவிடுகுறேன்
பஞ்சுபஞ்சாய்பரக்கடிக்குறேன் பாரும்ராணியை
பயந்துலகுங்குமே மூன்றுலோகமும் யென்பலத்தையரிந்துமே
நோக்கிநோக்கிதென்திசையிலே நாருயோசனை
கொடியில்பாய்ந்துஆலாவிருக்கத் கடியைக்கண்டேனே
ஆக்ரமித்துமேசுகிஆல வழியிற்புகுந்தேனே
யாகசாலமண்டபங்கண்டு அதிகமகிழ்ந்தேனே

பொது வசனம்.

இப்படி ஆலாவிருக்ஷத்தடியின் சுரங்கத்திலே பூமியின் கீழிரு க்கும் யாகசாலைமண்டபம் வந்து வீரமாங்காளிவரும் பொருட்டாய் சதமுகன் யாகஞ்செய்கிற விதங்காண்க.

சதமுகன் சொல் தரு.

சத்தியேசாம்பவி தயாளிதிகிருபாகரி
உத்தமீஸ்ரீபரிஹ ஓமகுண்டம்தனிலே
கத்திசூலம்தண்டமேந்தி கடிகிவந்தெழுந்துமே
வெற்றிதந்துயென்னையாளும் வீரசூரகாளியே

பொது வசனம்.

சதமுகன் யாகஞ்செய்கிறபோது காளிவருகிற விதங்காண்க.



காளிகாதேவி வருகிற கவி.

மண்டலம்கிடுகிடென்ன வாசுகிவருந்திவாட
யெண்டிசைகெஜமொடுங்க யிடிபோலஆக்ரகித்து
குண்டலஞ்தனிலெழும்பி கோரதந்தங்கள்வீச
கண்டவர்நடுங்க காளியும்வருகின்றாளே.

காளிகாதேவி வருகிற தரு.

வந்தாளேரணபத்ரகாளி கல்ல
பாங்கானசிங்க வாகனமேறி

சத்ருசங்காரி ஒய்யாரமாய்கல்ல
சதுர்வேதசிங்காரி சுடர்மழுதாரி
நவமணிமகுடப்பிரகாசி மிக்க
நடுங்கப்புவிகளெல்லாம் வீரங்கள்பேசி
சிவனெதிராடும்உத்தண்டி கல்ல
ஜெகரக்ஷகியான யிவள்சிலகண்டி
பதினெட்டுகரங்களும் கீட்டி-யிவள்
தரணிகிடுகிடென்ன பூதங்களோட்டி
யெண்டிசைபுகழ்சாலகிஷ்ணன் நான்
யெக்கதையுப்பீடேற்ற யெவர்க்கும்பிரதாபன்-வந்த

பொது வசனம்.

காளிசாதேவியை சதமுகராவணன் தோத்தரிக்கிர விதங்காண்க.

சதமுகன் சொல் தேவாரம்.

சந்திரவதனிகௌரிமுக்கண்ணி சாமளமகுடசிங்காரி
அந்தரிலிஅகோரஉத்தண்டி அம்பிகைசத்துருசங்காரி
மந்திரமோதிமகிழ்ந்திடயென்முன் மண்டலம்நடுங்கவேவந்தசோதி
சுந்திரவீரசுடர்மழுதாரி யுன்பாதம்அடியவன்போற்றி.

காளிகாதேவி சொல் சவி.

சதுர்முகசூராவாழி சரியானயாகஞ்செய்து
அதரணவேதமோதி அழைத்திடமனமகிழ்ந்தேன்
மிதமிகணங்கள்சூழ மேவியேவந்ததென்ன
மதகிரிபுயனேவேண்டும் வரமதையாவிப்பாயே

காளிகாதேவி சொல் வசனம்.

கேளுமப்பாசூரனே யென்னைநோக்கி ஜெபித்ததென்ன சொல்லும்சூரனே.

சதமுகன் சொல் வசனம்.

கேளுமம்மாதாயே யிதுகாலம் உமது கடாக்ஷத்தினாலே திருலோகத்திலுள்ள சத்துருஜெயம்பெற்று வந்தேன் யிப்போது வந்தசிதையினாலே அபஜெயம் நேரிடும்போல் காணுகிறது அந்தசிந்தனையசம்மாரம் செய்யும்தாயே.

காளி யுத்தம் செய்கிற தரு.

சொன்னவசனந்தன்னைக்கேட்டு துடிதுடிக்காளே
காளியம்மன் அடிபிடித்தாளே
சுரங்கம்தாண்டிசீதையைக்கண்டு சரங்கள்விடுத்தாளே

சீதை சொல் தரு.

யெடுத்தபோதுதடுத்துக்காளியை யெதிர்த்துக்கொண்டாளே
சீதையம்மன் பதைத்துநின்றாளே
யெமனும்தடுங்கயுத்தம்செய்வோம் வாடியென்றாளே

காளி சொல் தரு.

நடுநடுங்கதேவரெல்லாம் நாடிவந்தாளே
ரணக்களம் தேடிவந்தாளே
நரிக்கியுந்தனைசுரிக்கிலிப்போ வணைப்பேனென்றாளே

சீதை சொல் தரு.

யெரிபரந்திடவரிசிலைகளே யெடுத்தேன்பாரடி
சரம்தொடுத்தேன் பாரடி
யிடிக்கியுந்தனைஅடக்கிசேனையை மடிப்பேன்பாரடி

காளி சொல் தரு

சீதாயுந்தனைக்கொல்ல பூதகளத்துடனே
தேடிவந்தேன்சற்றே நில்லடி
செத்தப்பிணத்துடனே ஓத்துப்பிழைத்திடாமல்
வெற்றிவிருதணிய புத்தியுனக்கேயில்லை-சீதா

சீதை சொல் தரு.

யேதோவிதியுனக்கு மாதாஉலகுக்கென்று
நீயெண்ணிப்பாராமல் பேசுராய்
யெட்டியபூதங்கள்தன்னை வெட்டிக்குதிப்பேனென்று
யேதுமரிந்திடாமல் வீசுராய்
யின்னம்அரைகொடிக்குள் சின்னபின்னமாக்கி
பின்னப்படவும்விதி உன்னைவிடுவதுண்டோ-யே

காளி சொல் தரு.

வாடிவீரியம்பேசி நாடியெதிர்க்கவுன்னை
மடிக்கசரமெடுத்து மீட்டினேன்

மண்டி யமோசபாணம் கொண்டுமெதமடக்கி
வந்தியென துவீரம் காட்டினேன்
வந்தபூதங்களுன்னை கொல்லத்தணியாமுன்னே
நில்லாமலென்னெதிரே சொல்லாமலோடிப்பிழை-வாடி.

சீதை சொல் தரு.

வீரப்புடனேவந்து வேடிக்கையாகப்பேசி
மெத்தகுதிப்பதெல்லாம் கேடு
ரோஷக்காரிசூரன் யெல்லையடித்திடவே
வெற்கமில்லையோசீசி போடி
தள்ளாதேயிங்கேவந்து கொள்ளாதேமதமொன்றும்
கள்ளாமலுன்தலையை கொய்யாமல்விடுவேனே-வீரா

காளி சொல் கவி.

கரைபுகழ்யிலங்கைதன்னில் சதகண்டனென்றெடுத்துவந்து
சிரையிருந்தவளேசீதா தேவியேவெற்கமற்று
தூரைமகள்போலேவந்து துணிந்துவில்லெடுக்கலாமோ
அரைநிமிஷத்திலுன்னை அதோகதியாக்கச்செய்வேன்.

காளிகாதேவி சொல் வசனம்.

கேளடிசீதையே முன்னிலே உன்னைசதகண்டராவணன் யெடுத்துக்கொண்டுபோய் சிரையிலே அசோகவனத்தில் யிருந்தவருக்கு வெட்கமில்லாமல் வில்லெடுத்து வந்தாயல்லவா யிதோ உன்னைக்கண்டிக்குரேன் பாரடிசீதா.

சீதைக்கும் காளிக்கும் தர்க்கம்-தரு.

பேசாதும்பேசிவக்ரூகுதிக்காதே காளியேயென்னிட
வீரியம்தெரியாமல் யெதிர்க்காதே
கூசாமலீசனேடெதிராடிபுறங்கொடுத்துவிலங்கணிந்தாய்
கொண்டேன்சரமெடுத்து கோடிகோடியாய்பாணம்
கண்டைசுழன்றுசிங்கம் காலைதூக்கியாடவும்-தரு
காரடிதேரடி உயர்பாரடிகண்டுப்பேனடி-பேசா

காளி சொல் தரு.

ஓடாதேமீரிவந்துமுடிக்காதே அடி
உன்னிடகணவன்பேரை கெடுக்காதே

வாடாமல்யென்னவெல்ல பம்பரம்போலாட்டுவேன்
யெட்டிமட்டியேயுன்னை வெட்டிவிடஅட்டியுண்டோ-ஓடா

சிதை சொல் தரு.

வீராப்புடனேவந்து குலுக்காதே-மெத்த
வீணனவீரியம் பலுக்காதே
மாராசரமெடுத்து பிடித்தேன்
யேரிவந்தசிங்கதையு மடித்தேன்
மண்டியமோகசரம் கொண்டுஜாடவும்
யெண்டிசைபூத்தப்படை கண்டுபயந்தோடவும்-சரு
ஆடவும்தேடவும் வகைசாடவும்யிடைவிடாமல்-வீராப்

காளிசொல்-தரு.

மேலானவீரியக்காரி யிலங்கை
வீணையழித்த குலைக்காரி
கோலாகாலமாய்வந்த குடிகேடிவந்தன்
குலுக்கையுமரிவேண்டி போடி
கொஞ்சநேரத்திலுன்னை கொண்டுயிர்சாய்க்கவும்
மிஞ்சாமலுன்தலையை வெட்டிநான்போடவும்
மீரவும்தேரவும் மனம்நேருமோஉனைக்கொல்ல (மேலா)

சிதை சொல் கந்தார்த்தம்.

வெட்டியேசிங்கந்தன்னை வெட்கமற்றவளேயென்று
தட்டியேகரங்கள்தன்னை சபாசெனதோளைத்தட்டி
கட்டியேபிரட்டிதள்ளி காலிநால்மெரித்துகொண்டு
சட்டெனசூலம்வாங்கி

சிதை சொல் தரு.

தாங்கிநாளே உந்தனைக்கொல்ல-ஓங்கிநாளே
தத்தித்தரும்பியே ரத்தம்பெருகிட
சத்தபாதாளமும் உற்றுத்தியங்கிட-தாங்கி

காளிசொல் வண்ணத்-தரு.

அபயமுன்திருவடிக்கி அகிலலோகநாயகி
உபயபாதம்சரணமம்மா ஸ்ரீமன்நாயகி
தபமகிமையானசெல்வி தருணமிக்கருணைசெய்ய
சுபநயனம்வைத்தரசூழி சோதிரூபநாயகி

சீதை சொல் வண்ணத்தருவு.

பத்ரகாளிமுரையமிட்டு பதரிவாடகண்டனே
சித்தரூபிகுற்றம்பொருத்து ஜீவன்தந்தேன்கேளடி
சத்துருசூரன்தன்னையினி சார்ந்திடமும்மீவோடிமே
மித்துருவாகமீயிருக்க வேண்டியேகிபோகுவாய்

பொது-வசனம்.

இப்படியாக காளியைரக்ஷிக்க காளிகாதேவி சீதையைப்பார்த்து சொல்லுகிறவிதங்காண்க.

காளிதேவிசொல்-வசனம்.

கேளுமம்மாசீதையே தெற்கே நூறுயோசனைக்கப்புரம் பாரிய ஆலாவிருக்குமுண்டு அதனடியில் பிலத்துவாரமுண்டு அந்த பிலத்துவாரத்தில் யாகசாலை மண்டபமொன்றுண்டு சதமுகாசூரன் யாகஞ்செய்கிறான் அந்த யாகத்திலென்னை யெழுப்பியனுப்பினன் நான் வந்தேன் நீயின்னம கொஞ்சனேரத்தில் அந்தயாகத்தை யழிக்காவிட்டால் அனேக காளிவருவாள் அந்த யாகத்தையழித்து விடுமம்மா நான்போய் வருகிறேன் சீதையே.

பொது கந்தார்த்தம்.

ஓடியேசூரதீரன் ஓமஞ்செய்விதங்களெல்லாம்
நாடியேயழிப்பாயென்று நாயகிகூரக்கேட்டு
தேடியேதென்திசைக்கு சென்றுஆலடியில்புக்கி
கூடியேஅனுமாரெல்லாம்.

அனுமார் சொல் தரு.

குதித்துமேபதைத்தார் அந்தணர்தம்மை
பதைத்திடவதைத்தார்
மெதித்தயாகந்தன்னை மீரியழித்துவிட்டு
கொள்ளிக்கட்டையால்சுட்டு குத்திகுத்தியெழுப்பி-குதித்

சதகண்டராவணன் சொல் கந்தார்த்தம்.

குரங்குகள்யாகந்தன்னை கூடியேயழிக்கக்கண்டு
திரங்களுமழிந்துசூரன் சிவசிவாசிவனேயென்று
வரங்களும்போச்சுதென்று வல்லமையழயவோடி
சுரங்கத்தைவிட்டுதானும்.

சதகண்டராவணன் சொல் தரு.

சுருக்காகவந்தான் மனதுவாடி
பெருக்கவாய்திறந்தான்
திருகுகுகள் செய்தாலும் ஜெயமேதுயென்றெண்ணி
சென்றுவந்திடும்போது கண்டுசிதையெதுக்க

சிதை சொல்-தரு

சதமுகன்யெதிர்வரக்கண்டனே அவனை
தடுத்துப்போராடியே நின்றேனே

சதமுகன் சொல் தரு.

போராடவந்தாயோ சிதையேமலையை
பிடிங்கியடித்தேனே பேதையே

சிதைசொல்-தரு.

மலையைதும்சங்க ளாக்கினேன்
மடியசரங்கள்கோடி தாக்கினேன்

சதமுகன் சொல் தரு.

தாக்கவேரத்தங்கள் சொரிந்திட
சதமுகனெருகோடி வந்திட

சிதை சொல் தரு.

சதமுகன்தனையெல்லாம் வாட்டவே-வில் வில்
ஜெகமோகனஅஸ்த்திர மீட்டவே

சதமுகன் சொல்-தரு.

மீட்டிசரமெங்கும் ஜாடவே-சூரனும்
மெதுவாய்நழுகியே யோடவே

சிதை சொல் தரு.

ஓடஓடக்கண்டு வாட்டவே-சூரன்
ஓளித்துகொள்ளமனம் நாடவே

சதமுகன் சொல் தரு.

வாடிபட்டணம்நோக்கி தேடினன்
வந்துசிம்மாதன மேறினன்

சதமுகன்சொல்-கவி.

ஆடியபாதகாதா அய்யோநானென்னசெய்வேன்
நாடியயாகத்தாலும் நானெங்குமொளித்திட்டாலும்
தேடியே அடிபிடித்து சீதையும்வதைக்கவாரான்
பேடிபோலானேனேயோபிர்மனேயென்னசெய்வேன்

சதமுகன்சொல்வசனம்.

அரகரா மகாதேவா காலகண்ட திருநேத்திரா கயிலாசபதியே நானெங்கே யொளித்திட்டாலும் சீதைஅடி பிடித்து சண்டைக்குவந்து வதைக்குராளே நானென்னசெய்வேன் கர்த்தனே.

சதமுகன் சொல் கரு.

என்னசெய்வேனேயோ — யிப்படிவருமென்று
யெண்ணமலிருந்தேனே — தேவதேவரும்
குண்ணதவரந்தானே.
தேடிவீரம்கொண்டுயிப்போ — நாடிசீதையைகண்டுகானும்
வாடிதவிக்கச்செய்யஅஞ்சி — ஓடிஒளிக்கலாச்சே-யென்னு

ஆஸ்த்தானம்கொலுமேடை — அடங்கலும்கொரங்காலே
அழிர்திடவிதியாச்சே
சேனையெல்லாம் — ஒழிர்திடகெதியாச்சே
யானேசேனேபோக — யிப்படிமானயீனமாக
அஞ்சிகானும் — மனதுநோதவரவே
வானவர்க்கு — யெளிதாக-யென்னு

மலையொருதூம்பாகி — மடிந்துயிடிந்ததென்ற
வசனம்போலாச்சுதையோ
மனுஷியாலேவிசன — முண்டாச்சுதையோ-சுரு

மங்கையிவளே — வென்றாகானும்
பங்கமடைய — காணவேணும்
பொங்கமடைந் — திடவேவருமோ
சங்காசிவ — ஐங்கானேகான்-யென்னு





யீஸ்வரர்வருகிர-கவி.

யோசனைபலவும்செய்து உருகியேவரமளிக்கும்
யீசனைக்காணுவிட்டால் யென்குரைதீரதென்று
வாசனையுடையசூரன் வந்திடகயிலைநாடி
பாசமாய்கணங்கள்சூழ பரமனும்வருகின்றாரே.

யீஸ்வரர் வருகிர-தரு

யினமையவர்புடைசூழ
யீசன்கொலுவதாகிகார்

சமையபுரிபாலன்
தயவாககொலுவாகிஞர்

முப்பத்துமுக்கோடி
முரைமுரையாய்பணிந்தார்

அருவயர்ஆலாத்தி
அழகாகசூழ்ந்திருந்தார்

அந்தணர்பந்தியாய்கூடி
அண்டமதிர்ந்திடவே

உமையவள்மகிழ்ந்திட
கயிலைதன்னில்-யீசன்கொலு

சந்திரசேகரமூர்த்தி
கையிலைதன்னில்-தயவாக

தேவர்முனிவர்சூழ
சிவனைக்கண்டு-முரைமுரை

ஆலவட்டங்களேந்தி
வேடிக்கையாக-அழகாக

அழகாய்வேதகோஷ்ட்டம்
சம்பிரமதாக-அண்டமதிர்ந்தி

பொது-வசனம்.

இப்படியாக பரமசிவம் பளிங்குமாமண்டபத்தில் கொலுவிருக்கும்போது சதமுகன் யிசனைப்பணிந்து சொல்லுகிற விதங்காண்க.

சதமுகன் சொல் தரு

அரகராசங்கரனே ஆதிபராபரனே
உரகபணிதரனே தங்கள்திருவடிக்கிசரணம்
தற்பரா அர்ப்புதனே தாங்கள்தந்தவரத்தாலே
சர்ப்பனேரோமல்லாங்கள் சந்தோஷமாய்வாழ்ந்தோம்
குற்றகம்வந்ததிப்போ ராமன்சீதை
குரங்குடனேயெங்களை யெதிர்த்து
படையுடனேமாயாவை பாழாக்கிவிடக்கண்டு
யென்தமையன்சொல்லி யெனைக்கூட்டித்தானனுப்ப
சண்டையில்சீதையாலே தனித்திங்கேஞெண்டுவந்தேன்.

சதமுகன் சொல் வசனம்.

அரகரா மகாதேவா அயோத்தியாபுரி ராமன் சீதை தம்பிமார் குரங்குக்கூட்டத்துடன் வந்து யெங்களை யெதிர்க்கமாய்வை யழித்து சேனைமுதலானதும் மடித்துவிட்டது அவர்களை வெல்லும்படி வரமும் அஸ்திரங்களும் தந்தருளவேண்டும் கர்த்தனே.

யீஸ்பரர் சொல்-கவி.

அருமையாய்ருவணனுக்குஅரைகோடிஆயிஸ்தந்தோம்
ஒருமையாயுங்களுக்குஒருலக்ஷம் ஆயிஸ்தந்தோம்
பெருமையாய்யெனைதுதிக்க புரப்படும்அஸ்திரமொன்று
திரமைஜானகிமேல்வீச தேடியேயளித்தேன்பாராய்.

யீஸ்வரர் சொல் வசனம்.

கேளும் சதமுகராவண யிலங்காபுரி ராவணனுக்கு அரைகோடி ஆயிசுகொடுத்தோம் உங்களுக்கு ஒருலக்ஷம் ஆயிசுகொடுத்தோம் யிது யின்றேடே முடிவாய்விட்டது நீயோ ஸ்ரீகள் கையால் மடிவ தாகவரம்பெற்றிறுக்குராய் அந்த ராமனே காமாகும் அந்த சீதை யோ பார்வதியாகும் அவள்கையினாலே உனக்கு முடிவு நம்மைநாடி வந்தபடியால் நீபோய்யென்னை நினைந்து தோத்திரம்செய்தால் பாசு பதாஸ்திரம்வரும் அதைக்கொண்டு சீதைமீது யேவி அவள் மீகி மையைப்பாரும் சூரனே.

சதமுகன் சொல் தேவாரம்.

பூரணமனதாய்யிசனைப்பணிந்து
பூபனுமேவந்தகைகூப்பி
ஆரணப்பொருளேஅம்பிகைபாகா
அரகராவென்றுமேதுதிக்க
நீரணிக்கடவுள் அவரருளாலே
நொருங்கியகரத்தனிலமர்ந்த
தாரணிதூதிக்கும்பாசுபதாஅஸ்த்திரம்
தந்ததைவாங்கியேமகிழ்ந்தனனே.

பொது வசனம்.

இப்படியாக சூரன் பாசுபதாஅஸ்த்திரத்தை பெற்றுவர சீதை அம்மன் சதமுகனைக் காணுமென்று தேடிவரும்போது சதமுகனைக்கண்டு சந்தோஷமுற்று யுத்தம்செய்கிர விதங்காண்க.

சதமுகன்சொல்-தரு.

சீதையேயுனைக்கொல்ல பாசுபதாஅஸ்த்திரம்
பெற்றுநான்வந்தேனே
பேதமையென்னைக்கொல்ல பெலமேதுனக்கென்று
பிசண்டதனுவாங்கி தொடுத்தேனே
பிடித்துக்குரங்குடனே அடித்துமடித்துவிட
துடிதுடிக்கமனம் யெடுத்தேனஸ்த்திரம்கோடி-சீதை

சீதைசொல்-தரு.

மடித்துவிடுவேனென்று யெடுத்துசொல்லியநாவை
துடிக்கதுண்டித்தசரம் யெடுத்தேனே
விடத்துப்பேசவேயெந்த விடத்திலிருந்துவந்தாய்
விடுத்தேனேதிடா சற்றேபொருடாசும்மா
கெருடாஅஸ்த்திரம்விட்டு யெரடாமல்விடுவேனே-மடிற

சதமுகன் சொல்-தரு.

உன்னைப்போலவேபெண்கள் யின்னம்அனேகம்கோடி
ஓருமிக்கயெதிர்த்தாலும்படுமேனே
சின்னபின்னமாய்வெட்டி உன்னைநான்மடிக்காமல்
திரும்பிப்போகவிட்டு விடுவேனே
தெரிக்கசரங்களெல்லாம் உருக்கிசரமெடுத்து
யிரிக்கிவன்தலைதன்னை நரிக்கியெரிவன்யாரும்-உன்னை

சீதைசொல்-தரு.

திரூட்டுமாட்டுக்குரூடு பிட்டிப்போட்டதுபோல
திரேகத்தையென்சேனேசுடலாச்சே
அலட்டிப்பிரட்டியுன்னை யாகத்தையழித்திட
அதனுலேவெகுதுன்பம படலாச்சே
அடிக்காதேகீரேபோடா கெடுக்காதேகீர்த்தியை
அடக்கிவுன்னைவெட்டி மடிக்காமல்விடுவேனே-திரே

சதமுகன்சொல்-கந்தார்த்தம்.

கண்டுமேயெளிதம்கடுஞ்சினமடைந்து
கனல்பொறிபரக்கவேமீரி
கடுகியேயுன்னுடமுடிதனையறுத்து
காலனூருனுப்புவேனென்று
தண்டமானங்கள்கொண்டுமேயிவனும்
சபாசெனதோளைதைத்தட்டி
சராசரம்நடுங்கதரணிதத்தளிக்க
சண்டனும்தேங்கியேயொடுங்க
அண்டமும்நிரையஸ்திரம்பிரந்து
அக்கினிக்கொடியைகக்கிவரவே
அதிஉக்ரகோரமுங்காட்டி
அரனெறிஅயனுமேதையங்க
மண்டலம்சுழலரணமுமுதிர
மகாதேவன்மலரடிதுதிக்க

சதமுகன் சொல்-தரு.

வல்லவன்மனதுதுடித்தான் பாசுபதாஸ்திரத்தை
வில்லினில்யெடுத்துபிடித்தான்
கல்லதுகல்லதுசீதா கொல்லுவேனுன்னையிப்போ
சொல்லியேகடுகவிட்டு கொல்லலிசொட்டியதும்பி-கல்ல

சீதை சொல்கவி.

அகலவேபாசுபதாஸ்திரம்அதுகோடிகோடியாகி
புகலவேபூமியண்டம் பொருந்தியேபிரியக்கண்டு
கலங்கிடஸ்ரீராமர்தம்பி கண்டனர்சேனைவாட
சகலமும்கண்டுசீதாதுயரம்செய்கின்றாளே.

சிலை சொல்-தரு.

அபயமுந்தன் திருவடிக்கு அபயம்கெங்காதரனே
உபையபாதம்கெதியென்று ஓன்றுமரியேனே
மாதாபிதாகீயேபிசா பூகத்தின்வாசா
வேதாசலகாதாயிதுவேகோ ரக்ஷித்தருள்வீரே
அண்டரண்டபகிரண்டமும் அம்புயமாக
கண்டனேபசுபத அஸ்த்திரம்வந்திட
தெண்டனிட்டின்னடி தவுத்தியம்செய்தேனே
அரவப்பணிதரனேலோலா அமலாநித்யநிமலா
யிரவாவரம்அருளும் பராபரனேபாதம்சரணம்.

சிலை சொல் வசனம்.

அரகரா மகாதேவா சயிலாசபதியே அடியாளும் உத்தமியாயிருந்து யெனதுநாயகன் சத்தியவந்தனுய் வருவது நிஜமானல் யிந்த பாசுபதாஅஸ்த்திரம் பலவிதரூபாகரமடங்கி வியர்த்தமாகி புஷ்ப்பமாலையாய் யென்கழுத்தில் விழுவென்று உருதிகொண்டேன் கர்த்தனே.

பொது வசனம்.

இப்படியாக அம்மன்னினைத்து சிரமேல்கரங்கூப்பி சிவனேதியானித்திருக்க பரமசிவன் கடாக்ஷத்தினுலே பாசுபதாஅஸ்த்திரம் வியர்த்தமாகி ஜானகிகழுத்தில் பூமாலையாய்விழ அதைசூரன்கண்டு அரன்சொன்னவாக்கு நிஜங்கொண்டாரிந்தேன்மகாதேவா.

சதமுகன் சொல் கவி.

பரகதிகிடைக்குமிந்த பராசத்தியாலேமாள
திரமதுகொண்டுவில்லே சிக்கிரம்பெடுத்திட்டேனே.

சதமுகன் சொல் வசனம்.

அடா நான்விட்ட பாசுபதாஅஸ்திரம் வியர்த்தப்பட்டு பூமாலையாய் விழுந்ததே பரமசிவன்வாக்கியப்படி யிவளே பராசத்தியாகும் யிவள்கையினுலே மாண்டால் நமக்கு பரமபதம் கிடைக்குமென்று திடசித்தனுய் மனதிலுரிதிகொண்டு வில்லெடுத்து யுத்தம் செய்கிறவிதம்காண்க.

சதமுகன் சொல்-தரு.

அதமாகநான்விட்ட சிவஸ்திரம்
அணிமாலையாகவும்கண்டேன் மிக
அதுவாகதேகபம் கொண்டேன்
இதனுமேலோன்பய படிவேனென்றெண்ணுதே
யெடுத்தேன்சரங்களோடி தொடுத்தேன்விடுத்தேன்பாரும்- அ

சீதை சொல் தரு.

தொடுத்தேன் அஸ்திரமென்று யெடுத்துசொல்லுமுன்னே
வீரசூராவெட்கமில்லையோ
பாரும்உந்தனைக்கொலை தொல்லையா
யெடுத்தேன் அஸ்திரம்கோடி யெமபுரிசேர்க்கவே
விடுத்தேன்யென்னிட சமர்த்தைப்பாரடாபாரும்- தொடுத்

சதமுகன் சொல் தரு.

ஜெகஜாலிகற்ற மகிமைமந்திரமெல்லாம்
தெரியும்தெரியுமுன்னைவிடுவனே
ஆதிஅரிபிரம் மாதிகளாலும்விடுவனே
வெகுகோலாகாரியாய் வீரியம்படைத்தாலும்
வெல்லமுடியுமென்று சொல்லாதேயெதிர்நின்று-ஜெகஜாலி

சீதை சொல் தரு.

பதிவிரதைநானென்றால் யெதிராளிசூரனே
பரப்பிரம்மஅஸ்திரம் கொல்லுமேமிக
திரப்படவேவெட்டி வெல்லுமேயென்று
அதிவிதமாகவே யிதோவிட்டேனஸ்திரம்
அடித்துசூரனேவெட்டி மடித்துமகிழ்ந்தேனே-பதிவி

பொது வசனம்.

இப்படியாக அம்மநானலள் நானும்பதிவிரதையானால் யிதோவிட்டபிர்ம்மா அஸ்திரமானது ஜெயம்தரவேண்டுமென்றுநினைத்துவிட அந்த அஸ்திரமானது சதகண்டனுடைய சிரசை யருக்கமேரு வைங்கொத்தகரத்துடன்ருத்ரபூமியில்விழுதேவர்புகழ்யாவரும்மகிழ ஜெயவிருதடைந்து ராமர்முதலானவர்களும் மகிழ்ந்திருக்கயிந்த சேதியான துசகஸ்திரமுகராவணனுக்குத்தெரிந்து திடுக்கிட்டு சொல்லுகிறவிதங்காண்க.

சகஸ்த்தாமுகன் சொல்-கவி.

மதிபணியும்பரமனிடவரத்தினாலே
மானிலத்தில்யெங்களுடன்வந்தெதிர்த்து
யெமகிரியில்லையெனக்கெடிகொண்டோமே
யீனயவனும் அளவில்லாபடையுமாண்டு
மத்குலந்துவிதிமுடிந்தமனுவியாலே
மரண்டவிதம்தானறிந்துருகுங்க
சதியிதுவேசகமுகனேவாயில்மண்ணே
சாற்றினியேழுகோமானேயனசெய்வேன்

சகஸ்த்திரமுகன்சொல-தரு.

தம்பிரானென்னசெய்வேன்ஒருவர்க்கும் தடைபடாவீரியனே-சுரு
சண்டமாருதி மண்டலாதிபா
துண்டனேவுனை யென்துகர்ணுவேன்-தம்பி
மகுடத்துரைத்தினமே கெடிகொண்டமானிக்கமே-சுரு
மண்ணிலழகிய வண்ணனேயினி
குண்ணுதேமனம் கண்ணில்காண்பனே-மகுட
கரசரணதிகனும்அடிக்கடிக்க கத்திருட்டியே-சுரு
ரத்தத்துளிகள் மெத்தவுன்னிரு
பெற்றுவந்திட வரம்பெற்றவீரனே-கரசர
உந்தனிடவல்லமை யெங்கேயொளித்தாய்-சுரு
வாசமாகிய தேசமெங்குமே
நாசமடையவும் மோசமாச்சுதே
அர்ப்பமனுவியாலே யிப்படிப்பட்டாயோடா-சுரு
ஆருமோதையர் மீரிகுரங்குகள்
ஊரையழிக்கவும் பேருபிழைத்தேனே-அல்ப்ப

சகஸ்த்திரமுகன் சொல்-கவி.

தனும்பியேதத்தளித்து தயிரியம்படைத்துக்கொண்டு
கிளம்பியேயிடியைப்போலகெர்ச்சித்துவிருதுபூண்டு
தளங்களைகூட்டிக்கொண்டு தனிரதம்தன்னிலேரி
விளம்பியேசகஸ்த்திரகண்டன்வெகுண்டுமேவருகின்றனே.



ரணகளம்சகஸ்திரன்வருகிர-தரு

திண்டன்சகஸ்திரகண்டன் சமர்க்களம்நாடியே
சூரசூரனும்நடந்தான் பெருரதமதிலேரி-சூரசூரனும்
அண்டம்நடுங்கிடென்ன அதிரப்படைகடுங்க
ஆயிரகிரணங்கள் சோதிமுடிதலங்க-சுரு

ஊரபாரமுடன் வீரதீரனிட
தேருமீதிலேரி கோரமாகயிப்போ-தண்

நடுங்கப்புலிகளெல்லாம் சண்டாயிரம்காத்தி
கொடுங்கணைகனுதண்டம் கொண்டுதலங்கிடவே-சுரு

கோலமாகமணி மாலையாடிவர
மேலுமேலும்திரு சூலமிலங்கிட-தண்டி

தம்பட்டைபூரிபேரி தவண்டைமல்லரிபம்பை
கும்பிட்டுவெகுவீரர் கொண்டுமுழங்கவே-சுரு

கோடிகோடிபடை நாடிநாடிவர
யீடில்லாதபரி சூளிமிகுத்திட-தண்ட

குரங்குகூட்டமுமஞ்ச குலவுஞானகிராமன்
திரங்கெடுத்தமடிப்பேன் தீரம்பாருங்கோளென்று-சுரு

சேவர்பரவியே யாவரஞ்சிட
மூவர்போலவே காவிமீரிமேய-சூரங்கு

பொது வசனம்.


இப்படியாக வரும் சகஸ்த்திரமுகராவணனைப்பார்த்து அனுமா
ரானவர் ஸ்ரீராமமூர்த்தியைக்கண்டு சொல்லுகிர விதங்காண்க

அனுமார் சொல சவி.

தவரில்லாசகஸ்த்திரகண்டன் சண்டைக்குவரவுங்கண்டேன்
அவனுடன்சண்டைசெய்ய ஆசையுமிருத்துவந்தேன்
நவநீதராமமூர்த்திநமக்கிந்த விடையளித்தால்
யெவர்களுமரியசென்று யெமலுலகேத்தவேனே.

அனுமார் சொல்-வசனம்

சருணம் சருணம் சீதாபிராட்டிமனுளாசகஸ்த்திரமுகராவண
ன்சண்டைக்கி வந்திருப்பதால அவனுடனே யுத்தம் செய்ய அன்பு
கொண்டுவந்தேன் கொஞ்சநேரம் விடைதந்தால் அவனையெமகிரிக்கி
அனுப்பிவருகிரேன் பாருமையனே (அப்படியே உன்மனதின்படி ந
டவும் அனுமந்தா)



அனுமார் யுத்தத்திர்க்கு வருகிர தரு.

வாடாசகஸ்த்ரகண்டனேவல்லவனென்றாயென்னேதிரே
வாடாசகஸ்த்ரகண்டனே
யீடோயெனக்குபயமில்லே ஸ்ரீராமர்காண
யிடித்துஉந்தனே பொடித்திடுவேன்

யெட்டியேவாவிரால் தட்டியெரிந்திட
அட்டகாசமுடனே கிட்டியேவந்தேன்-வாடா

சகஸ்த்திரன்சொல தரு.

கிடுகிடென்றுஅசைந்திட அதட்டநானுமேபதட்டமுடன்
கண்டேன்ஒருகுரங்குவந்து காட்டியதந்தமும்காட்டமிட

கத்திமயங்கிட பத்தியவாலையும்
சுத்திசுழற்றியே மொத்துவேன்பாரும்-கிடுகி

அனுமார் சொல் தரு.

அரக்கர்குலமழிக்கவந்தேனே அடக்குவண்டா
கொடிக்குள்பாரடாபரக்கப்படை ரதமதையழித்தேன்

பாரியமலைமரம் வாரியுன்சேனையை
காருமாரக்கியே போருபோரிட்டேன்-அரக்கர்

சகத்திரன் சொல்-தரு.

பத்திக்குரங்குகள்தன்னை படபடப்பாகமுழுங்கினேன்
தத்திசெவிநாசியாலோடி தாண்டிகுதித்திடமீண்டிநேன்

தடத்தைக்கண்டுமே அடைத்துக்கொண்டேன்
விடுத்திடாமலே தடுத்தேனிதோ-பத்தி

சகஸ்த்திரன் சொல்-வசனம்.

அய்யோ நானும் குரங்குக்கூட்டங்களை கும்பல் கும்பலாகவாரி முழுங்க அதுகள் காதிநாலும் மூக்கினாலும் வெளிப்பட்டோட அதை அரிந்து குரங்குகளை ஒருமிக்க வாரிவயித்திலடைத்துக்கொண்டு நாசிகாதுவழிகளை யிரண்டாயிரம் கரங்களால் அடைத்துக்கொண்டேன் பாருங்களென்றுசொல்ல அதை அனுமாரரிந்து தன்னுடைய பலமெல்லாம் வலதுகையில் நிருத்தி சகஸ்திரராவணன்வயத்தின்பேரில் குத்துகிர விதங்காண்க.

அனுமார் சகஸ்த்திரராவணனை குத்துகிர-தரு

அனுமாரும்பத்தியே கூடித்தார்-ஓடி
அசுரன்மார்பினிலோடி அடித்தார்
அடிக்கவிழுந்துமேவாகநான் அப்போ
அரிந்துகுரங்கெல்லாம் ஓடினர்-அனுமா

சகஸ்த்திரன் சொல் தரு

குரங்கெல்லாம்வெளியோடே கண்டேன்-காணும்
குதித்துமனமகிழ்ந்து மகாண்டேன்
காலைதக்கிவாரி நின்றனைஉன்னை
கதராமல்பத்தியே கொண்டனை-குரங்

பொது வசனம்.

இப்படியாக குரங்கள்கரங்களைசேர்த்து அனுமாரைப்பிடித்து தூக்கி ஆட்டுகிறபோது அனுமார் யிவன்னம்மை யென்னை செய்வான் பார்ப்போமென்று குமராமல்யிருக்க யிச்சேதியை ஸ்ரீராமமூர்த்தியரிந்து ரதத்தைவேகமாய் செலுத்திவந்து சகஸ்த்திரனை யெதிர்க்கிற விதங்காண்க.

ராமர் சொல் தரு:

பதரீகோபம்கொண்டெழும்பி பாணமீட்டுவேன்
பயப்படாதேஆஞ்சநேயா யிவனைவாட்டுவேன்
சிதரியோடிதலைகளுருள சரங்கள்விடுத்தனே
யிவன்திரேகமுழுதும்சக்கைசக்கையாய்போர்த்தெடுப்பேனே

சூரன் சொல் தரு

கையிலிருந்தகுரங்கையெரிந்து கோபமீரினேன்
கடுகியோடிவந்தெதிர்க்க ரதத்திலேரினேன்
மெய்யிலணிந்தகவசம்நலங்க வில்லையெடுத்தேனே
மேகத்திடைபோலகர்ச்சித்து சரங்கள்விடுத்தேனே

ராமர் சொல் தரு.

விடுத்தேனஸ்த்திரம்கோடிகோடியாய் கடுத்துமீரியே
வீதிமுடிந்துமேலுலையெதிர்த்தாய் மனதுதேரியே
யெடுத்தேனஸ்த்திரம்யெமகிரிகொண்டு உன்னைசேர்க்கவே
யெந்தன்னலுமைகாணதேவர் வந்துபார்க்கவே

சூரன் சொல் கவி.

பாருமென்னிடசமர்த்தைகண்ணுல் பாணம்வருகுது
நீபம்பம்போலாடிவிழுவே மார்பிலுருகுது
கூருகூர்வாட்டியுங்களே மகால்லத்துணிந்தேனான்
கொடியபகையைமுடிக்கங்கணம்கையிலணிந்தேனையான்

ராமர் சொல் கவி.

ராவணதிகளேவென்றாமனென்றறிந்திருந்தும்
யேவினசரத்தைமாற்றியெதிர்த்திடவல்லவன்தான்
ஆவதுஆக்மித்தால் அழியுமென்றரிக்திடாமல்
பாவனேபிர்ம்மாஅஸ்த்திரம்பாடாயெடுத்திட்டேனே.

ராமர் சொல்-வசனம்.

நானே ராவணதிகளே ஜெயமடைந்தராமனென்று அறிந்திருந்தும் சற்றுவது அஞ்சாமல் யெதிர்ந்து நான்விட்ட அஸ்த்திரங்களே தடுத்துவிட்டாயல்லவா அடாராகூதப்பயலே நீயோ புயதீரத்திலும் மகாவீராதிவீரன்தான் ஆகிலும் பாம்புக்கு சமர்த்துப்பஞ்சமா உலகத்தில் யென்ன வல்லமை படைத்திருந்தபோதிலும் உலகத்தாருக்கு யிடுக்கமுண்டாக செய்வாராகில் அவர்கள் காலகண்டதிருநேத்திரனுக்கு சமானமுடையவ நானலும் பந்துவர்கத்துடனே ரணக்களத்தில் நாசமடைந்து நரகத்துக்கு யேதுவையாவாரென்பதை நீயரியாயோ யிதேதாவுன்னை யெமகிரிசேர்க்கும்படி பிர்ம்மா அஸ்த்திரம் விட்டேன் பாடா ராகூதனே.

சகஸ்த்திரன் சொல் கவி.

சவுரியம்படைத்துர்தான்சம்மந்திபதிகெடுத்த
பவருகள்செலுத்தயெண்ணம்பலித்திடயிங்கேவந்தாய்
யெவராலுமென்னைவெல்லயிடமுண்டோயிதோபாருன்னை
தவராமல்மடித்துதம்பிதன்பழிவாங்குவேனே.

சகஸ்த்திரன்சொல்-வசனம்.

அடா மானிடராமா நீவல்லமை சாலிதான் அதிகாலேயல்லவா யென்சம்மந்தி ராவணன் யெனது மருகனாகிய யிந்திரசித்து மூலபலமுதலானதும் மடித்தாயல்லவா அந்த பழிவாங்க வந்தேன் கும்பிடப்போன தெய்வம் குறுக்கேவந்ததுபோல் அகப்பட்டாயல்லவா யென் அதிஷ்டந்தான் யென்சம்மந்தி யெனது மருமகன் யென்த

ம்பி யிவர்கள் பழிக்குப் பழிவாங்கும்படி பிர்மாஸ்த்திரமெடுத்தேன் பாரும் மானிடராமனே.

சகஸ்த்திரன் சொல்-தரு.

பிர்ம்மாஸ்த்திரம் விக்ஷில்பிடித்தேனே
ரீவிட்டசரமதைபின்னிடும்படி வாங்கிவிடுத்தேனே

தர்மனும்பல தேவர்வாடிட
சண்டமாருதம் போலமாட்டிட
நகத்தகாயமுடன் யிரைச்சலிட்டுதே
புகையெழும்பியே விழுந்துகெட்டுதே-பிர்ம்

ராமர் சொல் தரு.

அண்டகோளமும்நடுங்குதே யிதோ
காராயண அஸ்த்திரம்விட்டோம் நமனுமொடிங்கிடவே

கொண்டலிடியென சூமரிமுழங்கிட
சுவலயங்களும் தத்தளித்திட
கொத்துகொத்தாகவே சிரசைதள்ளிட
பெத்தகால்கரம் யித்துவிழுந்திட-அண்ட

சகஸ்திரன் சொல் தரு.

வெட்டவெட்டதுருத்துவந்ததுபார் யென்கரம்சிரங்களும்
வெகுண்டுவெகுசரம் நாட்டிமீட்டினேன்பார்

சட்டமாகிய தேரழிந்தேனே
வட்டமாகிய வில்லெடுத்தேனே
கெட்டுவானரம் பட்டுமடிந்திட
விட்டபாணத்தால் ரத்தமோடிட-வெட்ட

ராமர் சொல் தரு.

குதித்துஅனுமந்தன் தேரிலேரினேனே
மருவில்லைவாங்கியேகோபமிகுத்து மனதுதேரினேனே

மருத்திடாமலே சரங்களைமிட்டினேன்
மடியபடைகளை அதமுமாக்கினேன்
யெதிர்த்தராக்ஷதர் யெங்கும்புரளவே
யிடங்கொள்ளாமலே தலைகளுருளவே-குதித்து

பொது வசனம்.

இப்படி சூரனைபலதரமழிக்க உருவுண்டாகிவர ராமசுவாமி யிளைத்து விசனமடைகிர விதங்காண்க.



ராமர் சொல்-கவி.

இலங்கைராவணனைக்கொல்ல யிப்பாடுபட்டதில்லை
பலம்கொள்ளும்சிரசைத்தள்ளி பலதரமழித்தேனையோ
கலங்காமல்முன்போல்வந்து கடிந்திடுமிவனைக்கொல்ல
நலங்களையிரிந்திடாமல் நான்மிகவிரிந்தினேனே.

ராமர் சொல்-வசனம்.

அப்பா அனுமந்தா யிலங்காபுரி ராவணன் மூலபலமுதலானது ம்மடித்தேனமே அதினாலே நான் யிப்பாடுபட்டதில்லை யிந்த யிருப தினாள்ராப்பகலாய் அண்ணமாகாரமில்லாமல் சண்டைசெய்து அனே க அஸ்த்திரத்தினால் யிவனுடைய கரசரணதிகளை வெவ்வேராக வெ ட்டி வெட்டி தள்ள தள்ள துளுத்து வருகுதே யிவனைக்கொல்லும் வகையரியேன் யென்செய்வேன் அனுமந்தா.

ராமர் சொல் தரு.

இதவென்னமோசம் அனுமந்தாயெனக்கு
வந்துதேகிலேசம்

அதிவித அய்யோத்தி தசரதமகாராஜன்
அநுந்தபம்தன்னுலே பிரத்தேனேநான்பாவி-சுரு

அத்தநாளாக யிந்தகெதிவிட
சிந்தைகளிக்கவும் வந்ததில்லேயோ-யிது

தாடகையைமடித்தேன் சுவாகுசூரன்
தளங்களையாவையுமடித்தேன்
வாடாதஜனகரன் மகிழும்வில்லேமுரித்தேன்
வழிமருத்துபரசுராம னுரம்பரித்தேன்-சுரு

மதிக்கும்யிளவன் துதிக்கும்சிதையும்
விதிக்குள்வனவாசம் கெதிக்குள்ளானேமே-இது

சிதையையிழந்தோமே ராவணனுலே
சிந்தைனெந்தழுதோமே
வாதைபிருந்துதேடி வந்துவந்தனைக்கண்டு
மாமரம்தனையெய்து வாலியைவதைசெய்து-சுரு

மட்டில்லாஅணைகட்டி வாரிதிவிட்டிலங்கை
தொட்டுசமர்செய்துபாணம் விட்டுகெலித்தோமே-யிது

ராமர் சொல் வசனம்.

இப்படியாக நாம் யெடுத்துவந்த கீர்த்தியெல்லாம் யிந்த சகஸ்த்திரமுகனுலே அழியகாலமோவென்று மனம்தயக்கமடைய அதை தேவர்களரிந்து நமக்காகத்தானே தண்டப்படுகிராரென்று சகஸ்த்திரகண்டனே கொல்லும்படி பிர்ம்மா அஸ்த்திரம்விடிக்கும்படி வாய்வுபகவானுலேதெரிவிக்க அப்போது ராமச்சந்திரமூர்த்தி சிந்தாக்கிரந்தராய் வருந்திர்க்க அப்போது சகஸ்த்திரராவணன் சொல்லுகிரவிதங்காண்க.

சகஸ்திரன் சொல் தரு.

அண்டரண்டபுவனம்நடுங்க அஸ்த்ரமெடித்தேனே
அளவிலாததுளைபட்டுருக மார்பிலடித்தேனே

ராமர் சொல் தரு.

அடித்தேனிதோசாரதிபுரவி தேருமழிந்திடவே
அணிமுடிமகுடம்ஆபிரம்கைகளும் அழிந்துவிழுந்திடவே

சகஸ்த்திரன் சொல்தரு.

விழுந்தகரசரணுதிகள் முன்போல்வந்திடவே
வில்லேவளைத்துசமரதைமீட்டினேன்உந்தனைமடித்திடவே

ராமர் சொல் தரு.

மடிக்கவேபிர்மாஅஸ்த்திரம் வாங்கிவீடுத்தேனே
மண்டைகள்சிதரி தண்டெனுண்டாகி ஜெயமதுகொண்டேனே.

பொது வசனம்.

இப்படியாக சகஸ்த்திரமுகராவணனை பிர்ம்மாஅஸ்த்திரத்தினுலே ஸ்ரீராமபிரான் மடித்து அவன்செய்த பூஜாபலத்தினுலே கயிலாசகிரியையடைந்து ரிஷிகளுடனே தானெருரிஷி கணமாகி சுகித்திருந்தார் அப்போது தேவர்கள் புஷ்ப்பமாரி பொழிந்தார்கள் ஸ்ரீராமச்சந்ரமூர்த்தியை கொண்டாடி துதிக்கயாவரும் னந்தாபவனந்தை யடைந்து அனுமாரான சுதரிசேனனை அழைத்துமாயாபுரிபட்டணத்தைமகுடம்சூட்டி பட்டம்கட்டி வேண்டிய புத்திமதிகளைச்சொல்லி தாங்கள்முன்போல அனுமாரின்பேரிலேரி கடலைத்தாண்டி அயோத்தியாபுரிபட்டணம் சேர்ந்து அரசுசெலுத்தி வருகிறார்கள்சுபம்சுபமஸ்த்து.

மங்களம்-சுப-மங்களம்-ஜெய-மங்களம்.

சகஸ்த்திரமுகராவண சம்மாரநாடகம்.

முற்றிற்று.

